II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 463 /2019**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 16.04.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : G.Sridevi | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எனக்கு தற்போது 40 வயதாகிறது. எம்.ஜி.ஆர் நகரில் குடியிருக்கிறேன் நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியும் வெளியில் வேலைக்கு போவதில்லை. எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் முழு விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கு சொத்து முதலில் பொன்னி என்பவருக்கு சொந்தமானது. பொன்னிக்கு வழக்கு சொத்து எப்படி உரிமையானது என்றால் எனக்கு தெரியாது. நான் பொன்னிக்கு 05.10.2018ல் ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானவை தான். அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றும் அனைத்து ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அறிவிப்பில் சொல்லியுள்ள 5 ஆவணங்ளும் என்னிடத்தில் உள்ளன. அவற்றை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

(இந்நிலையில் ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)